R 5404 (page 55)

# தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை

# CARELESS LIVING A FORM OF PROFANITY

"உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிதிலே வழங்காதிருப்பாயாக"
- யாத் 20:7.

கர்த்தர் உலகத்துடன் தொடர்புகொண்டிராததால் இந்தக் கட்டளை புறஜாதியாருக்கு கொடுக்கப்படவில்லை. இது நியாயப்பிரமாண உடன்படிக்கை மூலம் தேவனுடைய உறவுக்குள் வந்திருக்கிற யூத ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. யூதரில் அநேகர் பத்து கட்டளைகளை வெளிப்படையாக கடைப்பிடிப்பதற்கு மிகவும் கடினமாக முயற்சித்தார்கள் என்று நம்புவதற்கு ஒவ்வொரு காரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது ஜீவனும், கடைப்பிடிக்கத் தவறுவது மரணத்தையும் வருவிக்கும். அவர்களுடைய பெருமுயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து, அவர்கள் தொடர்ந்து மரித்துக் கொண்டிருக்கிறார்கள் - ரோமர் 7:10.

நம்முடைய ஆதாரவசனத்தின் இக் கட்டளையைக் கடைப்பிடிக்க அநேகர் பெருமுயற்சி செய்தபோதிலும், பரிசுத்த பவுல் இவர்களைப் பற்றி அறிவிக்கையில், தேவனுடைய நாமம் புறஜாதிகளின் மத்தியில் அவர்களால் தூஷிக்கப்பட்டது என்று கூறுகிறார்(ரோம2:24). அதிகஅளவு தூஷிக்கப்பட்டது என்பது அப்போஸ்தலரின் கருத்து என்று நாம்கருதமுடியாது. தேவதூஷணம் யூதர்கள் மத்தியில் பயங்கரமான அச்சம் தருகிற காரியமாயிருந்தது. தன் சொந்த பிள்ளை தேவதூஷணம் செய்ததை கேள்விப்பட்ட பெற்றோர், அவன் அப்படி செய்ததற்காக அவனை கல்லாலெறிந்து கொல்லப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. யூதர்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த வாழ்க்கை முறை, உண்மையில் உலகத்திற்கு முன்பாக தேவனுடைய நாமத்தை தூஷிப்பதாக இருந்தது என்று அப்போஸ்தலர் அர்த்தப்படுத்துவதாக நாம் கருதுகிறோம். அவர்கள் அறிவிக்கப்பட்டபடி தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர். தெய்வீக அறிவுரை, தெய்வீகப் பாதுகாப்பு, தெய்வீக அங்கீகாரத்தின் கீழிருந்த நிலையில், அவர்கள் தேவனுக்கு அவமரியாதையான காரியங்களை செய்தனர். அவர்கள் அவருடைய நாமத்தை தூஷணம் செய்தனர்.

பத்துக் கட்டளைகள் சபைக்கு கொடுக்கப்படவில்லை என்றபோதிலும், அதன் ஒவ்வொரு சிறப்பம்சமும் ஒரு கட்டளையாயிருக்கிறது. நம்முடைய அர்ப்பணிப்பின் சிறப்பியல்பின் மூலம், நாம் அவருடைய வார்த்தையின் வெறும் எழுத்துக்களையும் தாண்டி, தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள நாடுவதற்கு கட்டப்பட்டிருக்கிறோம். இதனால் சபை நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இல்லை என்றபோதிலும், பத்துக்கட்டளைகளின் பொதுவான அறிவுரைக்குள்ளாக நாம் இருக்கிறோம். எனவே, "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி(நியாயப்பிரமாணத்தின் உண்மையான பொருள்) நிறைவேறுகிறது" - ரோமர் 8:4.

தேவனுடைய எந்த உண்மையான பிள்ளையும், அர்ப்பணிக்கப்பட்ட எந்த கிறிஸ்துவின் பின்னடியாரும், பிதாவின் நாமத்தை வீணிலே வழங்குவதற்கான விருப்பம் உடையவராக இருக்கக்கூடும் என்று எண்ணிவிடக்கூடாது. இதனால் இந்த கட்டளையின் வெளிப்படையான அர்த்தம் நமக்குப் பொருந்தாது. தேவனுடைய பிள்ளைகளானதிலிருந்து அவருடைய ஆவியை பெற்றதிலிருந்து, தேவனுடைய நாமத்தை இழிவுபடுத்த விரும்புவது நமக்கு தூரமான,

விலக்கப்பட்ட காரியமாக இருக்கும். ஆனால் புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமத்தை யூதர்கள் கவனக்குறைவான ஜீவியத்தினால் இழிவுபடுத்தியதைப்போல, கிறிஸ்தவர்களும் தங்கள் கவனக்குறைவான ஜீவியத்தால் அவருடைய நாமத்தை இழிவுபடுத்தும் மாபெரும் அபாயம் இருக்கிறது. வேதத்தில் இது ஆபத்தானதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நம் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் வந்திருக்கும்போது வாழ்கின்ற இருக்கிற சிலரைப்பற்றி பேசுகையில், “கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?என்பார்கள். அதற்கு, “நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை” என்று அவர் சொல்லுவார். அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள்(மத் 7:21-23). அவர்கள் ஆட்டுமந்தையின் கதவு வழியாக வராதவர்களும், ஒருபோதும் கர்த்தரால் தம்முடைய ஆடுகளக அங்கீகரிக்கப்படாதவர்களுமாய் இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் மத்தியிலும் மனிதர்களை நேசிக்கும் பண்புடையவர்களும், சீர்திருத்த வேலைகளை செய்கிறவர்களும் இருப்பார்கள்.

ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மூலமாக, அவரே ஆளுகை செய்கிற ஆயிரவருடங்களே, தேவன் உண்மையான சீர்திருத்த வேலையை தொடங்கிவைக்கும் காலமாயிருக்கும். தற்போது கர்த்தர் அவருடைய வாக்குத்தத்தங்கள் மூலமாக அவருடைய ஜனங்களின் இருதயங்களில் கிரியைசெய்து, இந்த வாக்குத்தத்தங்களினால் உந்தப்பட்டு, அதைப் பயிற்சிசெய்துகொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை தேடிக்கொண்டிருக்கிறார். இவ்வாறு தேவன் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் அவரோடு உடன் சுதந்திரர்களாக இருக்க ஒரு சிறு மந்தையை விசேஷித்த ஜனங்களை தேடிக்கொண்டிருக்கிறார்.

## நாம் அவருடைய நாமத்தை விணிலே வழங்காதிருப்போமாக

இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, தேவனுடைய எல்லா ஜனங்களும் அவருடைய ஜனங்களாக, அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்று அறிவிக்கும்போது ... அதாவது, இயேசுவின் பின்னடியார்களாக இருக்கிறோம் என்றும், தங்களை கிறிஸ்தவர்கள் என்றும் அழைத்துக் கொள்ளும்போது, அவர்கள் கர்த்தருடைய நாமத்தை வீணாக எடுக்காதபடி மிக அதிகமாக தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிற அநேகர், எல்லா இடத்திலும் கிறிஸ்தவர்களின் நாமத்தை எடுக்காமல் இருந்தால் மிகவும் நலமாக இருக்கும். யார் உண்மையில் அவருடைய சீஷராக ஆகியிருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் நாமத்தை முறையாக எடுத்துக்கொள்ள இயலும். தன் சிலுவையை எடுத்து அவரை பின்பற்றுகிற ஒரே நிபந்தனையின் கீழ், எவரும் அவரது சீஷராகி, தன்னுடைய ஜீவியத்தையும், சித்தத்தையும் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இந்தக் கட்டளை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், இதன் ஆவி எப்படி நமக்குப் பொருந்துகிறது என்பதை நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். நாம்

**R5405 : page 56**

கிறிஸ்துவின் நாமத்தை நம்முடைய நாமமாக எடுத்துள்ளோம். நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிறதாக வெளிப்படையாக கூறுகிறோம். இதனால் தலையின் பரிசுத்த நாமம் அவருடைய சரீரத்தின் எல்லா அங்கங்களையும் சார்ந்ததாயுள்ளது. மணவாளனின் மதிப்பிற்குரிய நாமம், அவருக்கு மனைவியாகும்படி நியமிக்கப்பட்டவர்களை சார்ந்ததாயிருக்கிறது. நமக்கு நாமே எப்பேர்ப்பட்ட எச்சரிப்புணர்வை கொடுக்கவேண்டியுள்ளது! ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நாமத்தை நாம் வீணிலே வழங்கியிருக்கவில்லை என்று நாம் காண்பது எத்தனை பொருத்தமாயிருக்கும். இந்த உலகத்தில் அவருடைய பிரதிநிதிகளாக, தூதுவர்களாக இருக்கிற நம்முடைய ஸ்தானத்தின் பெருமதிப்பு, மேன்மை, பொறுப்பு ஆகியவற்றை நாம் மதித்துப் போற்றவேண்டும். எனவே நாம் விழிப்புடன் நடந்து, அந்த பரிசுத்தமான நாமத்துக்கு அவமதிப்பை கொண்டுவராதபடி உள்ளார்வமிக்க கவனம்எடுப்போமாக. மாறாக, நம்முடைய ஒவ்வொரு சிந்தையிலும் வார்த்தையிலும் செயலிலும் அந்த நாமத்தை நாம் கனப்படுத்துவோம்.

“நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்”. “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே” - 2பேதுரு3:11 ; 1பேதுரு1:15,16.

---------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com